# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 81/மா/2025**
**நாள்: 30.10.2025**

| | | |
|---|---|---|
| N. S. மாதேஸ்வரன்<br>ஒசூர் | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>ஒசூர் மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

ஒசூர், ஆர்.கே. ரோடு, பகுதி–10 நியூ அட்கோ, H.608 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.S.மாதேஸ்வரன் என்பவரின் 27.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.12.2024 அன்று பெறப்பட்டு, 81/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

ஒசூர், ஆர்.கே. ரோடு, பகுதி–10 நியூ அட்கோ, H.608 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. N.S.மாதேஸ்வரன் என்பவர் தனது 27.12.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"ஒசூர் மாநகராட்சியில் சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு. சுரேஷ் என்பவர் கடந்த 35 வருடங்களாக பணி புரிந்து வருகிறார். இவர் சிறப்பு வருவாய் ஆய்வாளர் என்ற பதவி மாநகராட்சி நிர்வாகத்தின் வழக்கத்தில் இல்லாததை தனக்கு சாதகமான அரசாணை (G.O.) பயன்படுத்தி வருகிறார். இவரின் முறைகேடுகள் மூலமாக பல கோடி ரூபாய் சொத்துக்களை ஒசூரில் வாங்கி குவித்துள்ளார். இவரால் நிர்வாகத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஒசூர் நகராட்சி 2011 நிலை II–ல் இருந்து சிறப்பு நிலை நகராட்சியாக 2011–ல் தரம் உயர்த்தப்பட்டது. அப்பொழுது சிறப்பு நிலை நகராட்சியுடன் ஆவலப்பள்ளி, சென்னத்தூர், ஜுஜுவாடி, மூக்கொண்டப்பள்ளி ஊராட்சிகள், மத்திகிரி பேரூராட்சி ஆகியவைகள் இணைக்க அரசு ஆணையிட்டது. ஒசூர் நகராட்சி சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு. சுரேஷ் மற்றும் அலுவலர்கள் கூட்டு சேர்ந்து சுமார் 1000–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் நிறைந்த Zone-I பகுதியை குடியிருப்பு பகுதியாக தொடரவும், அதன் மூலம் தொழிற்சாலை அதிபர்கள் பயனடையவும், வழிவகை செய்து, முறைகேட்டின் மூலம்

சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பெரும் தொகையை வசூலித்து வந்துள்ளனர். 2011–ம் ஆண்டு அரசு ஆணையை ஆகஸ்ட் 2024 வரை செயல்படுத்தாமல் சுமார் 13 ஆண்டுகளாக முறைகேடுகள் செய்து, அதன் மூலம் மாநகராட்சிக்கு சுமார் 100 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அதேபோல், ஒசூர் கே. அப்பாவு பிள்ளை பேருந்து நிலையம் வரும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் டெண்டரில் சுமார் 25 லட்சம் முறைகேடுகள் செய்து தனியார் ஒப்பந்ததாரர்களிடம் கூட்டு சேர்ந்து லட்சக்கணக்கில் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார். மேலும் ஜூலை மாதம் 17.07.2024 முதல் 29.10.2024 வரை பேருந்து நிலையம் RTO அலுவலர் மூலம் பெறப்படும் பேருந்து நிலைய தகுதி சான்று பெறாமல், பேருந்து நுழைவுக் கட்டணம் மட்டும் தனியார் வசூலிக்க வழிவகை செய்து, அதன் மூலம் பல லட்சம் ரூபாய் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

தற்பொழுது பணியில் உள்ள ஆணையாளர் திரு. ஸ்ரீகாந்த், IAS., அவர்கள் மேற்கண்ட முறைகேட்டை கண்டுபிடித்து, சுங்கம் வசூலித்த ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுத்து, அதன்பின்பு தான் பேருந்து நுழைவு சுங்கம் வசூலிப்பதை தடுத்து நிறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் பேருந்து நிலைய கடைகள் 6 , 7 ஆகியவைகள் பல லட்சம் ரூபாய் பாக்கியுள்ளதை மறைத்து மீண்டும் ஏலம் அறிவுத்துள்ளார். பாக்கி வைத்துள்ளவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இதுநாள் வரை எடுக்கவில்லை. மேற்கண்ட முறைகேடுகள் மூலம் திரு. சுரேஷ், பல லட்சம் ரூபாய் ஆதாயம் அடைந்துள்ளார்.

வரி வசூலிப்பதில் தனக்கு வேண்டியவர்களுக்கு சலுகை காட்டுவது, அதன் மூலம் ஆதாயம் பெறுவதும், வேண்டாதவர்களிடம் கடுமை காட்டுவது என முறைகேடுகள் செய்து ஒசூர் மாநகராட்சியில் 35 வருடங்களுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்தி வருகிறார். மேலும் மாநகராட்சியின் குத்தகை பாக்கி, வாடகை பாக்கி என பல லட்சம் ரூபாயை வாரா கடன் பட்டியலில் சேர்த்து, மாமன்றத்திற்கு தவறான வழிகாட்டுதல் செய்து பாக்கியுள்ள அனைத்து கடன்களை ரத்து செய்ய மூளையாக செயல்பட்டுள்ளார். எனவே, சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு.சுரேஷ்–ன் முறைகேடுகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 17.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஒசூர் மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3. ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 23.09.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 16677/2024/சி1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

''ஒசூர் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது இணைக்கப்பட்ட ஊராட்சி பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு சொத்து வரி உயர்வு செய்யாதது, ஒசூர் மாநகராட்சி பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூல் டெண்டரில் போக்குவரத்து அலுவலர் தகுதி சான்று பெறாமல் ஒப்பந்ததாரர்களை வசூலிக்க அனுமதித்தது மற்றும் பேருந்து நிலைய கடைகள் எண் 6 மற்றும் 7 க்கு குத்தகைதாரர் செலுத்த வேண்டிய நிலுவையினை வசூலிக்காமலேயே மறுஏல நடவடிக்கைகள் மேற்கொண்டது மற்றும் வரி வசூலிப்பதில் பாரபட்சம் காட்டி ஆதாயம் அடைவது போன்ற செயல்களில் ஒசூர் மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் (சிறப்பு) ஆக பணிபுரியும் திரு. எம். சுரேஷ்குமார் என்பவர் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக தெரிவித்து தனியர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு இம்மனுதாரர் முறையிட்டுள்ள பொருண்மைகள் மீது அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்காண் பொருள் குறித்து இம்மாநகராட்சியில் சிறப்பு வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு. எம். சுரேஷ்குமார் அவர்களிடம் இவ்வலுவலக காரணம் கோரும்

குறிப்பாணை ந.க. எண் சி1/016677/2024 நாள் 6.1.2025ன்படி விளக்கம் அளிக்குமாறு கோரப்பட்டது.

அதன்பேரில், திரு. எம். சுரேஷ்குமார், சிறப்பு வருவாய் ஆய்வாளர் அவர்கள் 24.1.2025ம் மனுவின் வாயிலாக அளிக்கப்பட்ட தன்னிலை விளக்கத்தினை முறைமன்ற நடுவத்தின் பார்வைக்கு முன்னிலைப்படுத்தப்படுகிறது.

மேலும், திரு. எம். சுரேஷ்குமார், சிறப்பு வருவாய் ஆய்வாளர் அவர்களை இவ்வலுவலக செயல்முறைகள் ந.க. எண் 0005/2025/சி1 நாள் 27.05.2025ன்படி ஓசூர் மாநகராட்சியின் மண்டலம் 1லிருந்து மண்டலம் 3, 4க்கு பணிபகிர்மானம் செய்து உத்தரவிடப்பட்டது.

மேலும், திரு. எம். சுரேஷ்குமார், சிறப்பு வருவாய் ஆய்வாளர் அவர்களை வேறு மாநகராட்சி / நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நேர்முக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.09.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"ஓசூர் மாநகராட்சியில் சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு.சுரேஷ் என்பவர் தனக்கு சாதகமான அரசாணை (G.O.) பயன்படுத்தி வருவதால் இவரால் மாநகராட்சிக்கு கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஓசூர் நகராட்சி 2011 நிலை II–ல் இருந்து சிறப்பு நிலை நகராட்சியாக 2011–ல் தரம் உயர்த்தப்பட்டது. அப்பொழுது சிறப்பு நிலை நகராட்சியுடன் ஆவலப்பள்ளி, சென்னத்தூர், ஜுஜுவாடி, மூக்கொண்டப்பள்ளி ஊராட்சிகள், மத்திகிரி பேரூராட்சி ஆகியவைகள் இணைக்க அரசு ஆணையிட்டது. ஓசூர் நகராட்சி சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு.சுரேஷ் மற்றும் அலுவலர்கள் கூட்டு சேர்ந்து 2011–ம் ஆண்டு அரசு ஆணையை ஆகஸ்ட் 2024 வரை செயல்படுத்தாமல் சுமார் 13 ஆண்டுகளாக முறைகேடுகள் செய்தும், சுமார் 1000–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் நிறைந்த Zone-I பகுதியை குடியிருப்பு பகுதியாக தொடரவும் அதன் மூலம் தொழிற்சாலை அதிபர்கள் பயனடைய வழிவகை செய்ததன் மூலம் மாநகராட்சிக்கு சுமார் 100 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார். தொழிற்சாலைகளுக்கு 13 வருடமாக வரி விதிக்காமல் கால தாமதம் செய்ததினால் அரசு புதிய வரி சட்ட திருத்தம் மூலமாக 6–1/2 வருட பாக்கி மட்டுமே வசூலிக்க இயலும். மீதமுள்ள 6–1/2 வருட வரி வருவாய் மாநகராட்சிக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் GST மற்றும் மின் இணைப்பு கட்டணம் பெற போலியான ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

அதேபோல், ஓசூர் கே.அப்பாவு பிள்ளை பேருந்து நிலையத்திற்கு தினந்தோறும் வரும் 700 முதல் 750 பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணத்திற்கு எவ்வித டெண்டரும் விடாமல் முறைகேடாக ஒரு பேருந்துக்கு ரூ.15/–வரை கட்டணம் வசூல் ஒப்பந்ததாரருடன் கூட்டு சேர்ந்து இலட்சக்கணக்கில் ஆதாயம் பெற்று அதன் மூலம் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார். மேலும் பேருந்து நிலையம் RTO மூலம் புதுப்பிக்காமல் 07/2024 முதல் 17.04.2025 வரை உள்ள இடைப்பட்ட காலம் ஆன சுமார் 9 மாதம் வருவாய் இழப்பு மாநகராட்சிக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த இடைப்பட்ட காலத்தில் தனி நபர் மூலம்

கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்திற்கு ஆண்டுக்கு ரூ.26,46,630/– வரை ஏலம் கோரப்பட்டு வந்தது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. முன்னர் பணியில் இருந்த ஆணையாளர் மேற்கண்ட முறைகேட்டை கண்டுபிடித்து, சுங்கம் வசூலித்த ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுத்த பின்பு தான் பேருந்து நுழைவு சுங்கம் வசூலிப்பதை தடுத்து நிறுத்தப்பட்டது. அதேபோல் பேருந்து நிலைய 6, 7 கடைகளுக்கு 2022 முதல் 2023 வரை பல லட்சம் ரூபாய் பாக்கியுள்ளதை மறைத்து மீண்டும் ஏலம் அறிவித்தும், மீண்டும் ஏலம் அறிவித்தது சட்ட விரோதமான செயலாகும். மேற்கண்ட இரண்டு கடை உரிமையாளர்களும் ரூ.40 இலட்சத்திற்கு மேல் வாடகையை செலுத்தாமல் உள்ள நிலையில் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்காமல் கடை உரிமையாளருக்கு சாதகமாக அவர்களின் முகவரி மற்றும் கோப்புகள் காணவில்லை என்று காரணம் கூறியும் எந்தவிதமான நடவடிக்கையும் இதுநாள் வரை எடுக்காமலும் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார். மேலும் மேற்கண்ட 6, 7 கடைகள் இன்று 25.09.2025 வரை பூட்டி வைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட கடைகளை வாடகைக்கு ஏலத்தில் எடுத்த திரு.சுகுணா மூர்த்தி, திரு.சீனிவாசன் ஆகியோரிடமிருந்து வாடகை நிலுவை தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

மாநகராட்சியின் குத்தகை பாக்கி, வாடகை பாக்கி என பல லட்சம் ரூபாயை வாரா கடன் பட்டியலில் சேர்த்து, மாமன்றத்தில் தவறான தகவல் அளித்து தீர்மானம் நிறைவேற்றும் வகையில் செயல்பட்டுள்ளார். எனவே, சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு.சுரேஷ் என்பவரின் முறைகேடுகள் மீது தகுந்த துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும், ஓசூர் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்திய சம்மந்தப்பட்ட அலுவலர்களை பொறுப்பாக்கி நிதி இழப்பினை ஈடு செய்யும் வகையில் ஓசூர் மாநகராட்சி ஆணையருக்கும் உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.".

6. ஓசூர் மாநகராட்சி மாநகர திட்டமிடுநர் மற்றும் உதவி ஆணையர் (பொ) மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர் 25.09.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரர் குறிப்பிட்ட தொழிற்சாலைகள் நிறைந்த Zone 1 பகுதி முன்னாள் ஆணையாளரால் கள ஆய்வு செய்யப்பட்டு வரி வசூல் செய்யப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டு 50 தொழிற்சாலைகளிடம் வரி மாற்றம் செய்து ரூ.80/–கோடி வரி வசூலிக்கப்பட்டது. மேலும் மீதமுள்ள தொழிற்சாலைகளிடம் உரிய வரி வசூல் செய்ய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஓசூர் மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய சுங்க கட்டணம் 2022–2023 ஆண்டு முதல் 2024–2025 மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை வசூலிக்க ஒப்படைக்கப்பட்டது. அன்னார் 2022–2023ம் ஆண்டுக்கு குத்தகை தொகை ரூ.25,20,600/– செலுத்தி உள்ளார். மேலும் 2023–2024ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகை ரூ.26,46,630/–ல் ரூ.15,00,000/– மட்டும் செலுத்தியுள்ளார். இவ்வினத்தில் குத்தகைவிடப்பட்டு வசூலிக்கப்பட்டப்பின் ரூ 39,25,591/– நிலுவைத் தொகையாக உள்ளது. குத்தகைதாரர் திருமதி.கமலாம்பாள் அவர்களுக்கு குத்தகை தொகையினை செலுத்த கோரி தபால்கள் அனுப்பப்பட்டு திரும்ப பெறப்பட்ட நிலையில் அன்னார் மீது குடிமையியல் வழக்கு (Civil Case) தொடர்ந்து உயர்நீதி மன்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு 21.05.2025 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.

மேலும் பேருந்து நிலைய 6, 7 கடை உரிமையாளர்கள் வாடகை பாக்கி வைத்துள்ள நிலையில் இது குறித்த கோப்புகள் அலுவலகத்தில் கிடைக்க பெறவில்லை. எனவே கடை

உரிமையாளர்களிடமிருந்து Revenue Recovery Act–ன்படி மேற்கண்ட நிலுவைத்தொகையை வசூல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஓசூர் மாநகராட்சியின் சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு.சுரேஷ் என்பவர் மீது மனுதாரர் குறிப்பிட்ட புகார் உண்மை என்ற நிலையில் அன்னாரை மண்டலம் 1ல் இருந்து மண்டலம் 3–க்கு பணிபகிர்மானம் செய்து 27.05.2025 அன்று உத்தரவிடப்பட்டது. மேலும் சிறப்பு வருவாய் ஆய்வாளர் அவர்களை வேறு மாநகராட்சி / நகராட்சிக்கு பணியிடம் மாற்றம் செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நேர்முக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.".

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், ஓசூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மாநகர திட்டமிடுநர் மற்றும் உதவி ஆணையர் (பொ) மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

ஓசூர் மாநகராட்சியில் சிறப்பு வருவாய் ஆய்வாளராக பணி புரிந்து வரும் திரு.சுரேஷ் என்பவர் தனக்கு சாதகமான அரசாணைகளை பயன்படுத்தி ஓசூர் மாநகராட்சிக்கு கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார் என்பதும், தொழிற்சாலைகள் நிறைந்த Zone-I பகுதியை குடியிருப்பு பகுதியாக தொடர அனுமதித்து, தொழிற்சாலை அதிபர்கள் பயனடைய செய்து மாநகராட்சிக்கு ரூ.100 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார் என்பதும் மற்றும் பல முறைகேடுகளில் ஈடுபட்டு மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார் என்பதும், ஓசூர் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களை பொறுப்பாக்கி நிதி இழப்பினை ஈடு செய்யும் வகையில் தகுந்த துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும், ஓசூர் மாநகராட்சி ஆணையருக்கும் உத்திரவிடுமாறு கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட தொழிற்சாலைகள் நிறைந்த Zone 1 பகுதி முன்னாள் ஆணையாளரால் கள ஆய்வு செய்யப்பட்டு வரி வசூல் செய்யப்படவில்லை என்பதனை உறுதி செய்யப்பட்டு 50 தொழிற்சாலைகளிடம் வரி மாற்றம் செய்து ரூ.80/–கோடி வரி வசூலிக்கப்பட்டது என்பதும், மேலும் மீதமுள்ள தொழிற்சாலைகளிடம் உரிய வரி வசூல் செய்ய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், ஓசூர் மாநகராட்சிக்கு சொந்தமான கே.அப்பாவு பிள்ளை பேருந்து நிலைய சுங்க கட்டணம் 2022–2023 ஆண்டு முதல் 2024–2025 ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை வசூலிக்க ஒப்படைக்கப்பட்டதில், குத்தகைதாரர் 2022–2023ம் ஆண்டுக்கான குத்தகை தொகை ரூ.25,20,600/– செலுத்தி உள்ளார் என்பதும், 2023–2024ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகை ரூ.26,46,630/–ல் ரூ.15,00,000/– மட்டுமே செலுத்தியுள்ளார் என்பதும், இவ்வினத்தில் குத்தகை விடப்பட்டு, வசூலிக்கப்பட்டபின், ரூ.39,25,591/– நிலுவைத் தொகையாக உள்ளது என்பதும், அதனை குத்தகைதாரர் திருமதி.கமலாம்பாள் என்பவரிடமிருந்து குத்தகை தொகையினை செலுத்த கோரி தபால்கள் அனுப்பப்பட்டு திரும்ப பெறப்பட்ட நிலையில் அன்னார் மீது குடிமையியல் வழக்கு (Civil Case) தொடர்ந்து உயர்நீதி மன்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு 21.05.2025 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது என்பதும், ஓசூர் மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண் 6, 7–ன் உரிமையாளர்கள் வாடகை பாக்கி வைத்துள்ள நிலையில், இது குறித்த கோப்புகள் அலுவலகத்தில் கிடைக்க பெறவில்லை என்றாலும், கடைஉரிமையாளர்களிடமிருந்து Revenue Recovery Act–ன்படி மேற்கண்ட நிலுவைத்தொகையை வசூல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், ஓசூர் மாநகராட்சியின் சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு.சுரேஷ்

என்பவர் மீது மனுதாரர் குறிப்பிட்ட புகார் உண்மை என்ற நிலையில் அன்னாரை மண்டலம் 1ல் இருந்து மண்டலம் 3–க்கு பணிபகிர்மானம் செய்து 27.05.2025 அன்று உத்தரவிடப்பட்டது என்பதும், அன்னாரை வேறு மாநகராட்சி / நகராட்சிக்கு பணியிடம் மாற்றம் செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நேர்முகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும் ஒசூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மாநகர திட்டமிடுநர் மற்றும் உதவி ஆணையர் (பொ) மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், ஒசூர் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது இணைக்கப்பட்ட ஊராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மனுதாரர் குறிப்பிட்ட தொழிற்சாலைகள் நிறைந்த Zone 1 பகுதி முன்னாள் ஆணையாளரால் கள ஆய்வு செய்யப்பட்டு தற்போது 50 தொழிற்சாலைகளிடம் வரி மாற்றம் செய்து ரூ.80/–கோடி வரி வசூலிக்கப்பட்டது என்றும், மீதமுள்ள தொழிற்சாலைகளிடம் உரிய வரி வசூல் செய்ய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், ஒசூர் மாநகராட்சிக்கு சொந்தமான கே.அப்பாவு பிள்ளை பேருந்து நிலைய சுங்க கட்டணம் 2022–2023 ஆண்டு முதல் 2024–2025 ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை வசூலிக்க ஒப்படைக்கப்பட்டதில், வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ள ரூ.39,25,591/–னை குத்தகைதாரரான திருமதி.கமலாம்பாள் என்பவரிடமிருந்து வசூலிப்பதற்கு, அன்னார் மீது குடிமையியல் வழக்கினை (Civil Case) உயர்நீதி மன்றத்தில் தொடர தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் இப்பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண் 6, 7–ன் உரிமையாளர்கள் வாடகை பாக்கி வைத்துள்ள நிலையில், இது குறித்த கோப்புகள் அலுவலகத்தில் கிடைக்க பெறவில்லை என்றாலும், கடை உரிமையாளர்களிடமிருந்து Revenue Recovery Act–ன்படி மேற்கண்ட நிலுவைத்தொகையை வசூல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் அறிக்கை மற்றும் மாநகர திட்டமிடுநர் மற்றும் உதவி ஆணையர் (பொ) மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ளவாறு, 17.07.2024 முதல் 29.10.2024 வரை பேருந்து நிலையம் RTO அலுவலர் மூலம் பெறப்படும் பேருந்து நிலைய தகுதி சான்று பெறாமல், பேருந்து நுழைவுக் கட்டணம் மட்டும் தனியார் வசூலிக்க வழிவகை செய்து, அதன் மூலம் பல லட்சம் ரூபாய் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளது குறித்து ஏதும் ஒசூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகர திட்டமிடுநர் மற்றும் உதவி ஆணையர் (பொ) மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் ஒசூர் மாநகராட்சியின் சிறப்பு வருவாய் ஆய்வாளர் திரு.சுரேஷ் என்பவர் மீது மனுதாரர் குறிப்பிட்ட புகார்கள் உண்மை என்பதால், அன்னாரை மண்டலம் 1ல் இருந்து மண்டலம் 3–க்கு பணிபகிர்மானம் செய்து 27.05.2025 அன்று உத்தரவிடப்பட்டும், வேறு மாநகராட்சி / நகராட்சிக்கு பணியிடம் மாற்றம் செய்யுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு நேர்முக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் அறிக்கை மற்றும் மாநகர திட்டமிடுநர் மற்றும் உதவி ஆணையர் (பொ) மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே,

(1) ஒசூர் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது இணைக்கப்பட்ட ஊராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மனுதாரர் குறிப்பிட்ட தொழிற்சாலைகள் நிறைந்த Zone 1 –ல் வரி வசூலிக்கப்படாத தொழிற்சாலைகளிடமிருந்து அரசு அறிவுறுத்தியவாறு உரிய வரியினை உடனடியாக வசூல் செய்யுமாறும்,

(2) ஒசூர் மாநகராட்சிக்கு சொந்தமான கே.அப்பாவு பிள்ளை பேருந்து நிலைய சுங்க கட்டணத்தை வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ள ரூ.39,25,591/–னை குத்தகைதாரரான திருமதி.கமலாம்பாள் என்பவரிடமிருந்து உரிய விதிமுறைப்படி துரிதமாக நிலுவையை வசூல் செய்யவும்,

(3) ஒசூர் மாநகராட்சிக்கு பல கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மூலம் சிறப்பு தணிக்கை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, அதன் அறிக்கையினை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கவும்,

(4) கடை உரிமையாளர்களிடமிருந்து Revenue Recovery Act–ன்படி நிலுவைத் தொகையை ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு வசூல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கவும்,

(5) ஒசூர் மாநகராட்சிக்கு பல கோடி ரூபாய் நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள மேற்கண்ட சிறப்பு வருவாய் அலுவலர் திரு. எம். சுரேஷ்குமார் என்பவர் மீதும், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் தகுந்த முகாந்திரம் இருக்கும்பட்சத்தில் உடனடியாக துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மற்றும் மேற்கண்ட அலுவலர்கள் மீது இதுநாள் வரை உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்திய அலுவலர்கள் மீதும் துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்,

மனுதாரரின் அனைத்து புகார் தொடர்பாக ஒசூர் மாநகராட்சி ஆணையர் நேரடியாக கள ஆய்வு செய்து, அதன் அறிக்கையினை 3 மாத காலத்திற்குள் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைக்கவும், அதனடிப்படையில் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. N. S. மாதேஸ்வரன்,
H.608, பகுதி–10 நியூ அட்கோ,
ஆர்.கே. ரோடு, ஒசூர்–635 109.
2) ஆணையர்,
ஒசூர் மாநகராட்சி,
ஒசூர்–635 103.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.
4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

3/11/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032